04.07.2016

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**"கோவையில் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு'**

**வரத்து குறைவால் மீன் விலை உயர்வு**

கேரளத்தில் இருந்து மீன் வரத்துக் குறைந்துள்ளதால், மீன் விலை அதிகரித்துள்ளது.

பல்லடத்தில் உள்ள மீன் கடைகளுக்கு, ராமேசுவரம், தூத்துக்குடி, நாகை உள்ளிட்ட கடலோர மாவட்டங்கள் மற்றும் கேரளத்தில் இருந்தும் மீன்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. கடந்த மார்ச்சில் தமிழகத்தில் இனப்பெருக்கத்திற்காக கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டு இருந்தது. இதனால் மீன் வரத்துக் குறைந்து விலை உயர்ந்தது. தற்போது அத்தடை நீக்கப்பட்டுள்ளது.

இதனால் மீன் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த 15-ஆம் தேதி முதல் கேரளத்தில் கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், மீன் இறைச்சிக்கான தேவை குறையவில்லை. அதனால் பற்றாக்குறை நிலவுகிறது.

அதன் காரணமாக தமிழகக் கடல் மீன்களுக்கு கிராக்கி ஏற்பட்டு, அதன் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது வஞ்சிர மீன் கிலோ ரூ.700, விளாத்தி மீன் ரூ.280,கெளுத்தி ரூ. 220, பாறை ரூ.360, இறால் ரூ.420, மத்தி ரூ.90 என விற்பனை செய்யப்படுகிறது. ரம்ஜான் உள்ளிட்ட பண்டிகை நாள்கள் வரவுள்ளதால் மீன் விலை மேலும் உயரக்கூடும் என்று மீன் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**ஏக்கருக்கு 100 டன் கரும்பு அறுவடை: விவசாயிக்குப் பாராட்டு**

கோபி அருகே உள்ள குள்ளம்பாளையத்தில் நடைபெற்ற யு5, யு6 கீழ்பவானி முறை நீர்ப்பாசன விவசாயிகள் சபையின் பொதுக்குழு கூட்டத்தில், ஒரு ஏக்கரில் 100 டன் கரும்பு அறுவடை செய்த விவசாயிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

யு5, யு6 கீழ்பவானி முறை நீர்ப்பாசன விவசாயிகள் சபையின் பொதுக்குழு கூட்டம், விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம் தலைவர் வி.பிரகாசம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, டி6 சபைத் தலைவர் கே.ஏ.காளியப்பன், கோபி ஒன்றியக்குழுத் தலைவர் பி.வி.தங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கே.கே.குணசேகரன் வரவேற்றார்.

கூட்டத்தில், கீழ்பவானி பாசனத் திட்டத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அளவீடு செய்து, எல்லை கற்கள் நடுவதற்கு தனிக்குழு அமைக்க நடவடிக்கை எடுக்க அரசை கேட்டுக்கொள்வது, கூகலூர் பிரிவு வாய்க்காலுக்கு உள்பட்ட பகுதிகளில் கரைகளின் இருபுறமும் உள்ள மரங்களுக்குப் பதிவு எண் போட வேண்டும். சேதம் அடைந்துள்ள கொப்புவாய்க்கால்களை சீரமைக்க வேண்டும். கடுக்காம்பாளையம் கசிவு நீர்த்திட்ட வாய்க்காலை தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி எல்லைகளைக் குறித்து கொடுக்க பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதைத்தொடர்ந்து, ஒரு ஏக்கரில் 100 டன் கரும்பு அறுவடை செய்த வேலம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி ஆர்.நடராஜனுக்கு கோபி கோட்ட முறைநீர் பாசன சபை பகிர்மான கமிட்டி, உழவர் விவாதக்குழு சார்பில் பரிசு வழங்கப்பட்டது.

இதில், கீழ்பவானி முறை நீர்ப்பாசன விவசாயிகள் கூட்டமைப்புச் செயலாளர் கி.வடிவேலு, துணைத் தலைவர் ஏ.ராமசாமி, இணைச் செயலாளர் பா.மா.வெங்கடாசலபதி, பொருளாளர் ஈசுவரமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்கள் விஜயதுரை, சதீஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அவல்பூந்துறை மையத்தில் 1,000 கிலோ கொப்பரை கொள்முதல்:ஆட்சியர் தகவல்

அவல்பூந்துறை கொப்பரை கொள்முதல் மையத்தில் 1,000 கிலோ கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி:

தற்போது சந்தையில் கொப்பரைத் தேங்காயின் விலை கிலோ ரூ. 50-க்கும் குறைவாக உள்ளதால், கொப்பரைத் தேங்காயை அரசு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னை விவசாயிகள் முதல்வரிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

இக்கூட்டத்தில், தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் கொப்பரைத் தேங்காயை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி முதல்வர் ஜெயலலிதா உத்திரவிட்டார். அதன்படி, கொப்பரைத் தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும்.

இந்த நேரடி கொள்முதல் மையங்களில், அரவைக் கொப்பரை கிலோ ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ. 62.40-க்கும் என்ற ஆதார விலையின் அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைத் தேங்காய்க்கு விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய 1 விழுக்காடு சந்தைக் கட்டணம் ரத்து செய்யப்படும். தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் கேட்டுக் கொண்டபடி, கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரைத் தேங்காயை விற்பனை செய்யும்போது மாநில அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய 5 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி முற்றிலுமாக ரத்து செய்யப்படும்.

இந்த நேரடி கொள்முதல் நிலையங்கள் ஜூன் 15-ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 271 ஹெக்டேர் பரப்பில் தென்னை

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது சந்தையில் கொப்பரைத் தேங்காயின் விலை கிலோ ரூ. 50-க்கும் குறைவாக உள்ளதால், தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நலன் கருதி தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்), பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்துள்ள கொப்பரைத் தேங்காயை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்) மூலமாக அரவைக் கொப்பரை கிலோ ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ. 62.40-க்கும் என்ற ஆதார விலையின் அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இதுவரை 1,000 கிலோ கொப்பரைத் தேங்காய் ரூ. 59,500-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார்.

## ரூ. 42 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 42 லட்சத்து 53 ஆயிரத்துக்கு கொப்பரை, தேங்காய் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி, அவல்பூந்துறை விளக்கேத்தி, நஞ்சைஊத்துக்குளி, கணபதிபாளையம், சோளங்காபாளையம், கருமாண்டம்பாளையம், நடுப்பாளையம், வடுகனூர், கோவில்பாளையம் உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1,766 மூட்டைகளில் 88 ஆயிரத்து 308 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 48.90-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 51.05-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 39.15-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 48.65-க்கும் என மொத்தம் ரூ. 40 லட்சத்து 33 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

தேங்காய் ஏலம் நடைபெற்றதில் 42,828 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், அதிகபட்சமாக டன் ரூ. 13 ஆயிரத்து 250-க்கும், குறைந்தபட்சமாக டன் ரூ. 10 ஆயிரத்து 769-க்கு ஏலம் நடைபெற்றது. இதன் மதிப்பு ரூ. 2 லட்சத்து 19 ஆயிரத்து 293 ஆகும். காய் ரூ. 3.62 முதல் ரூ. 5.72 வரை ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் காங்கயம், தாராபுரம், திருப்பூர், கோவை, சேலம், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்டனர்.

## பரமத்தி வேலூரில் பூவன் வாழைத்தார் விலை சரிவு



பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏல சந்தையில் பூவன் வாழைத்தார்களின் விலை சரிவடைந்தும் மற்ற வாழைத்தார்களின் விலை உயர்ந்துமுள்ளது.

பரமத்தி வேலூர் காவிரிக் கரையோரப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் சேலம், கோவை,

ஈரோடு, கரூர்,திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

சிறு விவசாயிகள் பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏல சந்தைக்கு வாழைத்தார்களை நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்யும் வசதி உள்ளது. இதனால் விவசாயிகள் ஏராளமான வாழைத்தார்களை ஏல சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த வாரங்களில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.550 வரை விற்பனையனது. ரஸ்தாலி வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.350-க்கும், பச்சைநாடன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.300-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.350-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.5-க்கு ஏலம் போனது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதில் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.500 வரை விற்பனையனது. ரஸ்தாலி வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.400-க்கும், பச்சைநாடன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.350-க்கும்,கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.400-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.5-க்கு விற்பனையானது.

கடந்த வாரத்தை விட சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு விசேஷ காலங்கள் அதிகம் இல்லாததால் பூவன் வாழைத்தாரின் விலை குறைந்தும், மற்ற வாழைத்தார்களின் வரத்து குறைந்திருந்ததால் மற்ற வாழைத்தார்களின் விலை உயர்ந்துமுள்ளது.

## இயந்திர நடவுக்கு இதுவரை ரூ. 32.8 லட்சம் மானியம் விநியோகம்: அமைச்சர் தகவல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் இதுவரை ரூ. 32.8 லட்சம் மானியம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றார் வேளாண்மைத் துறை அமைச்சர் இரா. துரைக்கண்ணு.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்டத்துக்கு நிகழாண்டு ரூ. 19.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் இதுவரை 230.85 டன் விதைநெல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 74.87 டன் விதைநெல் கையிருப்பில் உள்ளது.

தவிர, தனியார் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் வழங்குவதற்காக 194.5 டன் விதைநெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இயந்திர நடவு செய்ய 40 ஆயிரம் ஏக்கருக்கு ரூ. 16 கோடி இலக்கு அளிக்கப்பட்டது.

இதில், இதுவரை 10,201 ஏக்கரில் இயந்திர நடவு செய்த 2,818 விவசாயிகளுக்கு ரூ. 32.8 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. உபரி மின் உற்பத்தி அடைவதற்கு நாம் முன்னேறி உள்ளோம் என்றார் அவர்.

முன்னதாக, 58 பயனாளிகளுக்கு ரூ. 2.69 லட்சம் மதிப்பில் உதவித்தொகை ஆணைகள், விவசாய இடுபொருள்கள், மூன்று சக்கர சைக்கிள்கள் உள்ளிட்டவற்றை அமைச்சர் வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன், மாநிலங்களவை உறுப்பினர் ஆர். வைத்திலிங்கம், மக்களவை உறுப்பினர்கள் கு. பரசுராமன் (தஞ்சாவூர்), ஆர்.கே. பாரதிமோகன் (மயிலாடுதுறை), சட்டப்பேரவை உறுப்பினர்கள் சி.வி. சேகர்

(பட்டுக்கோட்டை), எம். கோவிந்தராஜன் (பேராவூரணி), மேயர் சாவித்திரி கோபால், மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**நாளை முதல் மலர் அலங்காரப் பயிற்சி முகாம்**

பெங்களூரில் ஜூலை 4-ஆம் தேதி முதல் மலர் அலங்காரப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை வெளியிட்டுள்ள செய்தி: தோட்டக்கலைத் துறை சார்பில் பெங்களூரு, லால்பாக் பூங்காவில் உள்ள எம்.எச்.மரிகௌடா நினைவு அரங்கத்தில் ஜூலை 4-ஆம் தேதி முதல் 9-ஆம் தேதி வரை 6 நாள்களுக்கு மலர் அலங்காரப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

இந்த முகாமில் பங்கேற்க ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பெங்களூரு ஊரகம், பெங்களூரு நகரம், தும்கூரு, ராமநகர், சிக்பளாப்பூர், கோலார், தென்கன்னடம், குடகு, மண்டியா, ஹாசன், சாமராஜ்நகர், மைசூரு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் சம்பந்தப்பட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்களிடம் விண்ணப்பங்களை அளிக்கலாம். பயிற்சியில் கலந்துகொள்வோர் நேரடியாக முகாமுக்கு வரலாம். மேலும் விவரங்களுக்கு 080-26576781 என்ற தொலைபேசி எண்ணில் அணுகலாம்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கை விவசாயத்திற்கு மானியம் வழங்கல்: வேளாண் இணை இயக்குனர் விளக்கம்

கீழ், இயற்கை வேளாண்மை விவசாயிகள் பயிற்சி வகுப்பு நடந்தது. இதில் வேளாண்மை அலுவலர் மனோகரன், இயற்கை பூச்சி விரட்டி குறித்தும், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய முனைவர் தண்டபாணி, இயற்கை வேளாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். பயிற்சிக்கு, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சபாநடேசன், தலைமை வகித்து பேசியதாவது: பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் உள்ள விவசாயிகள், தங்கள் விளை நிலங்களை இயற்கை வேளாண் முறைக்கு மாற்ற, ஏக்கருக்கு, ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அத்துடன் பசுந்தாள் உர விதைகள் மற்றும் நாற்றுகள் வாங்க, 500 மானியமும், இயற்கை இடுபொருளான பஞ்சகாவ்யா உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் வாங்க, ரூ.1,500 மானியமும், பசுந்தாள் உர கன்றுகள் நட, ரூ.2,000 மானியமும், தாவரங்களில் இருந்து பூச்சி விரட்டி தயார் செய்ய, ஆயிரம் ரூபாய் மானியமும், திரவ உயிர் உரம் வாங்க, ரூ.500 மானியமும் வழங்கப்படுகிறது. அதேபோல், பாஸ்பேட் மிகுந்த உரம் வாங்க, ஆயிரம் ரூபாய் மானியமும், மண்புழு உர உற்பத்தி தொட்டி அமைக்க, ரூ.5,000 மானியமும் வழங்கப்படுகிறது. மானிய தொகைகள் அனைத்தும், விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கை விவசாயத்துக்கு மாறி வரும் கே.ஆர்.பி., அணை பாசன விவசாயிகள்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த, கே.ஆர்.பி., அணை பாசன பகுதி விவசாயிகள், இயற்கை விவசாயத்துக்கு மாறி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி அடுத்த பெரியமுத்தூரில், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கே.ஆர்.பி., அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு, பெரியமுத்தூர், அவதானபட்டி, திம்மாபுரம், மலையாண்டஅள்ளி, கால்வேஅள்ளி, பையூர், பென்னேஸ்வர மடம் உட்பட பல கிராமங்களில், 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இந்நிலையில் கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால், அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு விரைவில் தண்ணீர் திறந்து விடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அணை பாசன பகுதியில் கிணற்று பாசனம் மூலம் தற்போதே நெல் நாற்று விடும் பணியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். இதற்கு முன்பாக, தங்களது நிலங்களில் விவசாயிகள் சனப்பை எனப்படும் செடியை வளர்த்து வருகின்றனர். இந்த செடியை அப்படியே நிலத்தில் உழவு செய்தால் மண்ணில் தழைசத்து அதிகம் கிடைக்கும். மேலும், தற்போது செம்மறி ஆடுகளை விவசாயிகள் தங்கள் நிலங்களில் இரவு நேரங்களில் பட்டி போடுகின்றனர். இவ்வாறு பட்டி போடும் போது ஆடுகளின் கழிவு நிலத்திற்கு இயற்கை உரமாக மாறுகிறது. ரசாயன உரங்களை போடுவதால் நிலங்கள் நாளுக்கு நாள் மாசடைந்து வரும் நிலையில் கே.ஆர்.பி., அணை பாசன பகுதி விவசாயிகள் பெரும்பாலானோர் இயற்கை வேளாண்மைக்கு மாறி வருகின்றனர். மேலும், அணை பாசன பகுதியில் பெரும்பாலானவர்கள் கால்நடைகளை வளர்த்து வருவதால், அதில் கிடைக்கும் எருவையும் தங்கள் நிலத்தில் கொட்டி வைத்துள்ளனர். ரசாயன உரங்கள் இடுவதை காட்டிலும், இயற்கை உரம் இடும் நிலத்தில் அதிக மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**தேயிலை ஏலத்தில் 84 சதவீதம் விற்பனை**

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏலத்தில், 84 சதவீதம் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத் தில் விற்பனை எண், 26க்கான ஏலம் நடந்தது. இதில்,13 லட்சத்து, 13 ஆயிரம் கிலோ தேயிலை துாள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 8 லட்சத்து, 56 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 4 லட்சத்து, 55 ஆயிரம் கிலோவும் இருந்தது. மொத்தம், 84 சதவீதம் தேயிலை விற்பனையானது.

கடந்த ஏலத்தை விட, ஒரு ரூபாய் விலை குறைந்தது. சி.டி.சி., ரகத்தில், உயர்ந்த பட்ச விலையாக, தேயிலை துாள் கிலோ, 196 ரூபாயும், ஆர்த்தோடெக்ஸ்
ரகத்துக்கு, 282 ரூபாயும் கிடைத்தது.

சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை, 85 ரூபாய் முதல், 87 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 130 ரூபாயில் இருந்து, 135 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

'டஸ்ட்' ரகத்தின் சாதாரண வகை, 90 ரூபாயில் இருந்து, 94 ரூபாய்; தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது.இதன் மதிப்பு, 10 கோடியே 72 லட்சம் ரூபாய் ஆகும்.

**வியக்க வைத்த காட்டு காளான்**



கூடலூர்: கூடலூர், பால்மேடு தனியார் தேயிலை தோட்டத்தில் முளைத்த, பெரியளவிலான காட்டு வகை காளான், பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தியது.

நீலகிரி மாவட்டம், கூடலூர் பால்மேட்டை சேர்ந்தவர் அப்துல்லா; இவருக்கு சொந்தமான தேயிலை தோட்டத்தில், நேற்று, பெரியளவிலான காட்டு வகை காளான் வளர்ந்திருந்ததை, இப்பகுதி மக்கள் கண்டு வியந்தனர். அப்துல்லா கூறுகையில், “தேயிலை தோட்டங்களில், பல வகை காளான்கள் முளைப்பது வழக்கம். ஆனால், இதுவரை, இதுபோன்ற பெரியளவிலான காளானை பார்த்ததில்லை," என்றார்.

தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், 'மழை காலங்களில், மரத்தின் வேர், தேயிலை தோட்டங்களில், காளான்கள் வளர்வது வழக்கம். இதுவரை பார்த்ததில், இக்காளான் தான், மிகப்பெரியதாக இருக்க முடியும்," என்றனர்.

## நாவல் பழ விளைச்சல் அதிகரிப்பு சுற்றுலாப் பயணிகள் பூரிப்பு

கோத்தகிரி: கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில், மருத்துவ குணம் கொண்ட நாவல் பழசீசன் களைக்கட்டியுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன், பறித்து ருசித்து செல்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில், வனப்பகுதியில் அதிக எண்ணிக்கையில், நாவல் மரங்கள் உள்ளன. இதே போல, தனியார் பட்டா நிலங்களிலும், குறிப்பாக, தேயிலை தோட்டங்களுக்கு நடுவே, நிழலுக்காகவும் நாவல் மரங்கள் வளர்க்கப்படுகிறன. இப்பழங்களுக்கு, ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் சீசனாக உள்ளது. சுண்ணாம்பு மற்றும் இரும்பு சத்து நிறைந்த இப்பழங்கள், நீரிழிவு நோய்க்கும், உடல் சூட்டை குறைப்பதற்கும் உதவுகிறது. இதனால், நீலகிரி மக்கள் இப்பழங்களை விரும்பி உண்ணுகின்றனர். வனப்பகுதியில் இருந்து சேகரிக்கும் இப்பழங்கள், ஊட்டி, குன்னூர் மற்றும் கோத்தகிரி உள்ளிட்ட, மாவட்டத்தின் பிற பகுதிகளில், ஒரு லிட்டர், 30 முதல், 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

வனத்துறையினர் கூறுகையில்,'இப்பழங்களை, கரடிகள் விரும்பி உண்ணுகின்றன. இதனால், நாவல் மரங்கள் உள்ள தேயிலை தோட்டங்களில்,

கரடி நடமாட்டம் இருக்கலாம். சுற்றுலா பயணிகள் மற்றும் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்' என்றனர்.

## சிறுமலை பலா சீசன் துவக்கம் வரத்து அதிகரிப்பால் விலை குறைவு

திண்டுக்கல்: சிறுமலையில் பலா சீசன் துவங்கியுள்ளதால், பழங்கள் விற்பனைக்கு வரத்து அதிகரித்துள்ளது.

சிறுமலையில் 6 ஆயிரம் ஏக்கரில் பலா பயிரிடப்பட்டுள்ளது.

காபி தோட்டங்களுக்கு இடையே ஊடுபயிராக உள்ளது. இந்த மரத்தின் இலைகள் உரமாக பயன்படுகிறது. வரிக்கி, கஞ்சி என இரண்டு வகையான பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. வரிக்காய் தின்பதற்கு, கஞ்சி காய் சமையல் செய்வதற்கும், மாவு பொருளுக்கும் பயன்படுகிறது.

சிறுமலையில் ஏப்ரல், மே மாதங்களில் பலா உற்பத்தி துவங்கும். ஜூன் முதல் செப்டம்பர் வரை சீசன் காலமாகும். இந்தாண்டு கோடை மழை பெய்ததால் விளைச்சல் நன்றாக உள்ளது. வரத்தும் அதிகரித்துள்ளது.

சுவை மிகுந்தது: கேரளா, புதுக்கோட்டை பலா வகைகளில் நீர் சத்து அதிகமாக இருக்கும். சிறுமலை பழத்தில் நீர் சத்து குறைவாக இருப்பதால் இதற்கு சுவை அதிகம்.

கோடைகாலத்தில் ஒரு பழம் ரூ.900த்திற்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வரத்து அதிகமாக உள்ளதால் ரூ.250க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சிறுமலை விவசாயி சுசீந்திரன் கூறியதாவது: சிறுமலை பலாவில் நீர் சத்து குறைவாக இருப்பதால் விரைவில் கெட்டு போகாது. பறித்து 20 முதல் 25 நாட்கள் தாக்கு பிடிக்கும். திருப்பூர், கோவை, தாராபுரம், சென்னைக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. வியாபாரிகள் முன்கூட்டியே சிறுமலையில் முகாமிட்டு வாங்கி செல்கின்றனர். வரத்து அதிகரித்துள்ளதால் இன்னும் விலை குறைவதற்கு வாய்ப்புள்ளது, என்றார்.

## பழநியில் மஞ்சள், வாடல் நோயால் கருகிவரும் கொய்யாச் செடிகள்

பழநி: பழநி கொய்யா செடிகள் மஞ்சள்நோய், வாடல்நோய் தாக்குதல் கருகுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை, திண்டுக்கல், சேலம், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளைசேர்ந்த வியாபாரிகள் ஆயக்குடி சந்தையில் கொய்யாவை மொத்தவிலைக்கு வாங்குகின்றனர். ஆயக்குடி பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கொய்யா சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு 15 டன் அளவிற்கு விற்பனையாகிறது.

கொய்யாசெடிகளில் மஞ்சள்நோய், வாடல்நோய் தாக்குதலால் செடிகள் கருகிவருகின்றன. பூக்கள் உதிர்ந்து காய்ப்பு குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயக்குடி விவசாயி செல்வம் கூறுகையில்,“ ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கொய்யச் செடிகள் நோயால் பாழாகிவருகின்றன. மருந்துகள் தெளித்தும் பலன் இல்லாமல் இலைகள் மஞ்சள்நிறத்திற்கு மாறி, செடிகள் கருகிவிடுகின்றன.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குனருக்கு புகார் அளித்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து கொய்யாச்செடிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றார்.

## மானியத்தில் சோலார் பம்பு: விண்ணப்பிக்க அழைப்பு

கரூர்: விவசாயிகளுக்கு, 80 சதவீத மானியத்தில் வழங்கப்படும் சோலார் பம்புகளுக்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கலெக்டர் காகர்லா உஷா வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தில், முதல்வரின் சிறப்பு திட்டமான பாசனத்திற்கான சோலார் பம்புகளுடன் நுண்ணீர் பாசன வசதி திட்டத்தில், 2015-16ம் நிதியாண்டில் ஆழ்குழாய் கிணறு பிரிவில் சோலார் பம்பு செட், 15 அமைக்க பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் சூரிய ஒளியால் இயங்கும் மின் மோட்டார்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு

முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இதில், ஐந்து எச்.பி, 7.5 எச்.பி, மற்றும், 10 எச்.பி., கொண்ட மின் மோட்டார்கள் அமைக்க, 80 சதவீதம் மானியம் வழங்கப்படும். சூரிய ஒளியால் இயங்கும் மின் மோட்டார்கள் தேவைப்படும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## விவசாயத்தில் சொட்டுநீர் பாசனம்: தோட்டக்கலைத்துறை விளக்கம்

கடம்பங்குறிச்சி: கடம்பங்குறிச்சியில் கரூர் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில், வேளாண்மையின் பாரம்பரியம் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கலா தலைமை வகித்தார். வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பொறுப்பு ராஜவேலு முன்னிலை வகித்தார். இயற்கை வேளாண்மை பண்ணையம் குறித்த தொழில்நுட்ப புழுதேரி வேளாண் அறிவியல் மைய திட்ட இயக்குனர் திரவியம், இயற்கை பாரம்பரிய வேளாண்மை பண்ணைய திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலைத்துறை அபிவிருத்தி திட்டம் மற்றும் சொட்டு நீர் பாசனம் போன்றவற்றை விளக்கிக் கூறினர்.

## ராமநாதபுரத்தில் உப்பு உற்பத்தி.. அதிகரிப்பு 4 நாட்களுக்கு ஒருமுறை சேகரிப்பு

ஆர்.எஸ்.மங்கலம்: ராமநாதபுரத்தில் நிலவும் கடுமையான வெப்பத்தால் உப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் நான்கு நாட்களுக்கு ஒரு முறை சேகரிக்கப்படுகிறது.

தமிழகத்தில் துாத்துக்குடி, நாகபட்டினம் மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டிற்கு நான்கு பருவங்களாக மார்ச் மாதத்தில் சூடுபிடிக்கும் உப்பு உற்பத்தி அக்டோபர் மாதம் வரை எட்டு மாதங்கள் நடக்கிறது.

மாவட்டத்தில் தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, சம்பை, கோப்பேரிமடம், வாலிநோக்கம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் 1000 ஏக்கரில் உப்பள தொழில் நடக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு உர நிறுவனங்களுக்கும், ரசாயன தொழிற்சாலைகளுக்கும் அதிகளவில் அனுப்பப்படுகிறது.

மாவட்டத்தில் தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, சம்பை, கோப்பேரிமடம், வாலிநோக்கம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் 1000 ஏக்கரில் உப்பள தொழில் நடக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு உர நிறுவனங்களுக்கும், ரசாயன தொழிற்சாலைகளுக்கும் அதிகளவில் அனுப்பப்படுகிறது.

அயோடின் கலக்கப்பட்ட முதல் தர உப்பு உணவு பொருட்களுக்கும், இரண்டாம் தர உப்பு கருவாடு தயாரிப்புக்கும் செல்கிறது. வாலிநோக்கத்தில் ஆயிரம் ஏக்கரில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்படும் உப்பு தமிழக ரேஷன் கடைகளுக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் பெய்த சாரல் மழையால் காற்றில் ஈரப்பதம் அதிகரித்து ராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. கடந்த ஒரு வாரமாக நிலவி வரும் வெப்பநிலை உப்பு உற்பத்திக்கு ஏற்றதாக அமைந்துள்ளதால் உப்பள பாத்திகளில் இருந்து நான்கு நாட்களுக்கு ஒரு முறை உப்பு சேகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உப்பள தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

திருப்பாலைக்குடியை சேர்ந்த உப்பள தொழிலாளி முருகேசன் கூறுகையில்,' தற்போது நிலவும் சீதோஷ்ண நிலையால் தினமும் 1,500 டன் உப்பு வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு டன் ரூ.850 முதல் ரூ.1200 வரை விற்கப்படுகிறது. முதல் தர உப்பு தூத்துக்குடி துறைமுகம் மூலம் இந்தோனேசியா, மாலத்தீவு, பிலப்பைன்ஸ் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிது,' என்றார்.

## உழவர் பாதுகாப்பு திட்டம்: ரூ.128.72 கோடிக்கு உதவி

நாமக்கல்: உழவர் பாதுகாப்பு திட்டத்தில், நாமக்கல் மாவட்டத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளில், 1.32 லட்சம் பேருக்கு, 128.72 கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்.விழாவில், 2,271 பயனாளிகளுக்கு, ஒரு

கோடியே, 27 லட்சத்து, 80 ஆயிரத்து, 550 ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் தங்கமணி பேசியதாவது: மாவட்டத்தில், மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். கடந்த, ஐந்து ஆண்டுகளில், ஒரு லட்சத்து, 32 ஆயிரத்து, 318 பேருக்கு, 128.72 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். இதில், சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர் சரோஜா, எம்.பி., சுந்தரம், எம்.எல்.ஏ.,க்கள் பாஸ்கர், சரஸ்வதி, சந்திரசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## அரூரில் ஆந்திர மாநில நாவல் பழம் விற்பனை ஜோர்

அரூர்: அரூரில், ஆந்திர மாநில நாவல் பழம் விற்பனை ஜோராக நடந்து வருகிறது. தர்மபுரி மாவட்டம், அரூரில் மருத்துவ குணம் மிக்க நாவல் பழம், ஒரு கிலோ, 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆந்திர மாநிலத்தில் இருந்து நாவல் பழம் வரத்து அதிகரித்துள்ளதால், கடந்த ஒரு வாரமாக விலை குறைந்துள்ளது. இதுகுறித்து, அரூரை சேர்ந்த வியாபாரி சரவணன், 42, கூறியதாவது: ஆந்திர மாநிலம் மதனப்பள்ளி, குப்பம் பகுதிகளிலிருந்து நாவல் பழங்கள் அதிகளவில் விற்பனைக்கு வருகிறது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, ஒரு கிலோ நாவல் பழம், 240 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, வரத்து அதிகரிப்பால் விலை குறைந்து, 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இன்னும் ஒரு சில வாரங்களில் நாவல் பழ சீசன் முடிவடையும். அப்போது நாவல் பழத்தின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

# குமரியில் தேங்காயை மிஞ்சியது ஈர்க்கு விலை கிலோ ரூ.18.50க்கு கொள்முதல்



நாகர்கோவில் : நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்தி வரும் தேங்காயை விட வீடுகளை சுத்தப்படுத்த பயன்படுத்தும் ஈர்க்கின் விலை அதிகமாக உள்ளது. தேங்காய் கிலோ ரூ.11க்கும் ஈர்க்கு ரூ.18.50க்கும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. குமரிமாவட்டத்தில் ரப்பருக்கு அடுத்தபடியாக தென்னை சாகுபடி சிறப்பு பெற்று விளங்கி வருகிறது. சமீபகாலமாக தேங்காய்க்கு உரிய விலை இன்மை, நோய்தாக்குதல் போன்ற காரணங்களால் தென்னை விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள். கேரளா வாடல் நோயால் தென்னைமரங்கள் அழிந்து வருகின்றன. ஏராளமான தோட்டங்களில் 50 சதவீத

மரங்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் உற்பத்தி குறைந்து வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ தேங்காய் ரூ.11க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு தென்னை மரத்தில் தேங்காய் வெட்ட ரூ. 20 கூலி உள்ளது. நல்ல காய்ப்பு திறன் உள்ள தென்னை மரத்தில் மட்டுமே இந்த கூலி கொடுத்து தேங்காய் அறுவடை செய்ய முடியும். இரண்டு, மூன்று தேங்காய் கிடைக்கும் மரங்களில் வெட்டுக்கூலி வரை கிடைப்பதில்லை. தற்போது உள்ள விலையில் வெட்டுக்கூலி, சுமட்டுகூலி கொடுத்த பின்னர் கணக்கு பார்த்தால் தென்னை விவசாயிகளுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. இது ஒரு புறமிருக்க தென்னை ஓலையில் இருந்து சேகரிக்கப்படும் ஈர்க்கிற்கு நல்ல விலை உள்ளது. ஒரு கிலோ ரூ.18 முதல் 18.50 வரை விவசாய தொழிலாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

இதனால் தொழிலாளர்கள் தற்போது ஈர்க்கு சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். தேங்காயை விட ஒரு கிலோ ஈர்க்கு ரூ.7.50 அதிகமாக விற்பதால் விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர். குமரிமாவட்டத்தில் உற்பத்தியாகும் ஈர்க்கிற்கு வெளிமாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் தென்னை ஓலைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் ஈர்க்கு உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கூறுகிறார்கள். ஈர்க்கு சேகரிக்கும் தொழிலில் பெரும்பாலும் வயதானவர்களே ஈடுபடுகிறார்கள். தற்போது விலை அதிகரித்து செல்வதால், தாங்கள் தள்ளாடும் காலத்தில் பொருளாதாரத்தில் தடுமாறி விடாமல் ஈர்க்கு காப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

## மாவட்டத்தில் பரவலாக மழை நெல் நாற்று நடும் பணி துவங்கியது மகசூல் அதிகரிக்க வாய்ப்பு

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதையடுத்து, நெல் நாற்று நடும் பணி துவங்கியது. தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, மஞ்சள் ஆகியவை முக்கிய சாகுபடி பயிர்களாகும். நெல் பயிரிடுவதில் அனைத்து பகுதி மக்களும் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர். மாவட்டத்தில் தர்மபுரி, அரூர், பாப்பிரெட்டிபட்டி ஒன்றியங்களில் நெல் பயிரிடும் பரப்பு அதிகமாக உள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 24 ஆயிரம் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

கடந்தாண்டில் வடகிழக்கு பருவ மழை போதிய அளவை விட கூடுதலாக பெய்தது. நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழையும் பரவலாக பெய்து வருகிறது. இதனால் ஏரிகள், அணைகளில் நீர்வரத்து அதிகரித்து கிணறுகளின் நீர் மட்டமும் கணிசமாக உயர்ந்து வருகிறது. தர்மபுரி - பென்னாகரம் சாலையில் அதகப்பாடி கிராமத்தில் நெல் நாற்று நடும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மழைப்பொழிவு சீராக இருப்பதால், இந்தாண்டு நடப்பாண்டை விட நெல் சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

## போச்சம்பள்ளி வாரச்சந்தையில் மாதுளை கிலோ ரூ50க்கு விற்பனை

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் மாதுளம்பழம் கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம் கிலோ ரூ.100க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், விலை குறைந்ததால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

மகாராஷ்டிரா மாநிலம் கோலாப்பூர், சோலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் மாதுளை அறுவடை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அங்கிருந்து இந்தியா முழுவதும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

தமிழகத்தில் அனைத்து பகுதிகளுக்கும் மகாராஷ்டிரா மாதுளை விற்பனைக்கு வருகிறது. வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரிகள் நேற்று கூடிய போச்சம்பள்ளி வாரச்சந்தையில் மாதுளம்பழங்களை விற்பனைக்காக கொண்டு

வந்து குவித்தனர். தள்ளுவண்டிகளில் வைத்து கூவி கூவி விற்பனை செய்தனர். இதனால், விலையும் குறைந்தது. கடந்த வாரம் கிலோ ரூ.100 வரையிலும் விற்பனை செய்யப்பட்ட பழங்கள், நேற்றைய சந்தையில் விலை குறைந்ததால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாலாற்றில் தடுப்பு அணை!




அண்டை மாநிலங்களை எடுத்துக்கொண்டால், இந்த மாநிலமக்கள் அந்த மாநிலத்தில் போய்வாழ்வார்கள். அந்த மாநிலமக்கள் இந்த மாநிலத்தில் வந்துவாழ்வார்கள். இருவருக்குமிடையே பரஸ்பர சகோதரபாசம் நிலவும். இருமாநிலங்களுக்கிடையே வர்த்தகங்கள் ஜரூராக நடக்கும். ஆனால், ஒரு மாநிலத்தில் இருந்து அடுத்த மாநிலத்துக்கு வரும் நதிநீரால்தான் பிரச்சினை

ஏற்படுகிறது என்பதற்கு முல்லைப்பெரியாறு அணைநீர், காவிரிநதிநீர் பிரச்சினை ஆகியவை எடுத்துக்காட்டாகும்.

அந்த பட்டியலில் இப்போது பாலாறு பிரச்சினையும் சேர்ந்துவிட்டது. பாலாற்றில் தடுப்புஅணை உயரத்தை அதிகரித்து கட்டிக்கொண்டிருக்கும் ஆந்திராவின் நடவடிக்கைக்கு, தமிழகஅரசு சார்பில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா எதிர்ப்பு தெரிவித்துள்ளார். பாலாறு என்பது கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில் உள்ள நந்திமலையில் உற்பத்தியாகும் ஆறாகும். கர்நாடக மாநிலத்தில் 93 கி.மீ. தூரம் பாயும் இந்தஆறு, ஆந்திராவில் 33 கி.மீ. தூரம் மட்டுமே ஓடுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் 222 கி.மீ. தூரம் ஓடி சென்னைக்கு தெற்கே 100 கி.மீ. தூரத்தில் உள்ள வயலூரில் வங்காள விரிகுடா கடலில் சங்கமம் ஆகிறது. வடமாவட்டங்கள் அனைத்துக்கும் இந்த பாலாறுதான் தேனாறு. 4 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசனவசதி அளித்து, லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாக திகழ்கிறது. 1892–ம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சென்னை–மைசூர் ஒப்பந்தத்தில், அட்டவணை ஏ–யில் குறிப்பிட்டுள்ளபடி, மாநிலங்களுக்கிடையே பாயும் 15 முக்கியநதிகளில் பாலாறு முக்கியமானதாகும். இந்த ஒப்பந்தத்தின்படி, மேல்பகுதியில் உள்ள மாநிலங்கள் கீழ்பகுதியில் உள்ள மாநிலங்களின் முன்அனுமதி இல்லாமல் எந்த அணை கட்டுமானத்தையோ, அல்லது நீரை தடுப்பதற்கான கட்டுமானத்தையோ, அல்லது நீரை திருப்புவதற்கும், நீரை தேக்குவதற்கும் உரிய எந்தவொரு செயலையும் மேற்கொள்ளமுடியாது.

10 ஆண்டுகளுக்கு முன்பு சித்தூர் மாவட்டம், குப்பம் பகுதிக்கு அருகே பாலாற்றின் குறுக்கே ஒரு அணைகட்ட ஆந்திரபிரதேச அரசு முயற்சித்தநேரத்தில், அப்போதும் முதல்–அமைச்சராக இருந்த ஜெயலலிதா எடுத்த துரிதநடவடிக்கையின் விளைவாக, தமிழகஅரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கை தொடர்ந்தது. இதன்அடிப்படையில், இந்த அணைகட்டும் முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த பிரச்சினையில் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, இருமாநில அதிகாரிகளுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தையில் தீர்வுகாண

முடியாததால், மீண்டும் 5 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அணைதானே கட்டக்கூடாது, நாங்கள் தடுப்புஅணை கட்டுவோம் என்ற ஒரு முயற்சியில் ஆந்திர அரசாங்கம், பெரும்பள்ளம் என்ற கிராமத்தில் ஏற்கனவே இருந்த தடுப்பணையின் உயரத்தை, 5 அடியில் இருந்து 12 அடியாக உயர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. எல்லை பகுதியில் ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்தில் அமைந்துள்ள இந்த தடுப்பணையின் உயரத்தை 12 அடியாக உயர்த்தினால், வழிந்தோடும் தண்ணீர்கூட தமிழ்நாட்டுக்கு வராது. மேலும், இது சட்டவிரோதமானது என்ற அடிப்படையில், இதை தடுத்துநிறுத்தக்கோரி ஆந்திர முதல்–மந்திரி சந்திரபாபு நாயுடுவுக்கு, தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். உடனடியாக இந்த கட்டுமானபணிகளை நிறுத்தவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். ஆனால், சந்திரபாபு நாயுடு, 'நாங்கள் சட்டவிதிகளுக்கு உட்பட்டுதான் கட்டுகிறோம். தமிழகஅரசு எங்களுக்கு உத்தரவிடமுடியாது என்றாலும், தமிழகஅரசோடு பேச்சுவார்த்தை நடத்துவோம்' என்று கூறியிருக்கிறார்.

ஆந்திர முதல்–மந்திரி இந்த பிரச்சினையில் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று கூறியிருப்பதால், ஒரு சுமுகத்தீர்வுகாணும் முயற்சியைத் தொடங்க தமிழக அரசு உடனடியாக ஆந்திராவோடு பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். ஆந்திரஅரசு இந்த தடுப்பணையை உயர்த்தி கட்டிக்கொண்டிருப்பதால், மத்திய அரசாங்கத்துக்கு தகவல்தெரிவித்து, உடனடியாக நிறுத்தச்சொல்லி ஆந்திர அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும். இல்லையென்றால், ஏற்கனவே குப்பம் அணைக்கட்டை தடுத்து நிறுத்தியதைபோல, உச்சநீதிமன்றத்தில் ஒரு அவசரவழக்கை தொடர்ந்து இடைக்காலதடையை பெறவேண்டும். இந்த 3 நடவடிக்கைகளும் மின்னல்வேகத்தில் எடுக்கப்படுவதை பொதுப்பணித்துறை உறுதிசெய்யவேண்டும்.